பெரிய ஆற்றின் குறுக்கே அணை

*564 வினு.—திரு. வி. செல்லதுரை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டி ஊராட்சிப் பகுதி, குடுவம் பட்டியில் ஓடிக்கொண்டிருக்கும் "பெரிய ஆற்றில்" அணை கட்டும் திட்டம் எதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

வந்தவாசியில் தெரு விளக்குகள்

*565 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி பேரூராட்சி எல்லையில் உள்ள குழல் விளக்குகள் ஓராண்டு காலமாக எரியாத காரணத்தால் குழல் விளக்குகளுக்குப் பதில் சாதாரண மின் விளக்குகளைப் போடும் படி பேரூராட்சி கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மின்வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து 350 குழல் விளக்குகளில் 225 குழல் விளக்குகள் எரிகின்றன. மீதி இருக்கும் குழல் விளக்குகளும் எரிவதற்காக, மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது பெரும்பாலான குழல் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதனுல், இப்பொழுது சாதாரண விளக்கு களாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என வந்தவாசி பேரூராட்சி கூறியுள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, 200-க்கும் அதிகமாக எரிவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறுர்கள். நான் அந்த வந்தவாசி பேரூராட்சித் தலைவனுக இருக்கிறேன். உண்மை யிலேயே அங்கே எரியும் விளக்குகள் 100-க்கும் குறைவுதான், அது

1974 மார்ச் 22]

சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பல முறை அணுகி, நீங்கள் குழல் விளக்கு இல்லையென்றாலும் சாதாரண விளக்குகளை யாவது போட்டுக் கொடுங்கள் என்று கேட்டால், அதற்குப் புரொ விஷன் இல்லை என்று சொல்கிறார்கள். குழல் விளக்குகளும் ஸ்டாக் இல்லை, சோக் ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, அந்தத் தகவல் பொருத்தமுடையதாக இருக்க முடியாது. ஆகவே, எல்லா விளக்குகளும் எரிவதற்கு உடனடியாக நடவ டிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, என் னிடத்தில் கிடைத்த தகவல்படி சொன்னேன். இப்பொழுது அங் கத்தினர் சொன்னதை நான் உடனுக்குடன் விசாரணை செய்யச் சொல்கிறேன். தற்போது நடைமுறையில் எரியாத விளக்கு களுக்கு ஒரு வருடத்தில் மூன்று முறைகள் பல்புகள் மின்வாரியம் எந்தவிதக் கட்டணமின்றி போடவேண்டும் என ஆணை உள்ளது. மின்வாரியம் மாற்று பல்புகள் போட தாமதமானால் ஊராட்சிகள் பல்புகளை மொத்த விற்பனை விலையிலாவது அல்லது டைரக்ட்ரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் விலைவிகிதப் படியிலாவது வாங்கி மின்வாரியத்திடம் கொடுத்து வருடத்திற்கு சாதாரண பல்புகளை மூன்று முறைகள் மாற்றலாம். பிறகு அந்த பல்புகளின் ரசீதுகளை இணைத்து மின்வாரித்திடம் கொடுத்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மூன்று முறைகளுக்கு மேலாக பல்புகள் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அந்தந்த ஊராட்சிகளே, அந்தக் கட்டணத்தை ஏற்கவேண்டும். மின்வாரியம், எரியாத குழல் விளக்குகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை மட்டும் பல்புகள் மாற்றும். எனவே, உடனடியாக அந்த பேரூராட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதைப்பற்றி நான் வேண்டிய ஏற்பாடு களைச் செய்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அப்படிப் பேரூராட்சியே வாங்கிப் போட்டுக் கொள்கிறோம் என்று சொன்னாலும், அதற்கும் புரொவிஷன் இல்லை என்று மின்சாரத் துறையில் சொல்லி விட்டார்கள். ஆகவே, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, 27-ம் தேதிக்குப் பிறகு அதை அறிவிக்கிறேன்.

[1974 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 566.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இங்கே ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் யார் கேட்ட கேள்வி என்ற விவரமே இல்லை. ஆனால் இன்னொரு விவர அறிக்கையில், 'திரு. என். கிட்டப்பா, எம்.எல்.ஏ. விடுத்த சட்டமன்றப் பேரவையின் உடுக்குறியிட்ட வினா எண் 1992-க்கு அளித்த விடையைக் காண்க' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போல இரண்டு, மூன்று தடவைகள் கொடுத்திருக்கிறார்கள். இது நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. எனவே, ஒரே முறையானபடி இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 5008 (ஆ)விற்கான விவரங்கள் என்று போடப்பட்டிருக்கிறது.

" Details for (B) for the starred question No. 5008 " சில சமயங்களில் பெயர் போடப்பட்டிருக்கும், சில சமயங்களில் எண் போடப்பட்டிருக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இன்னொரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு உறுப்பினர் பெயர் விவரமும் இருக்கிறது. எனது பெயர் அச்சிடப்படவில்லையே. அதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிப்பார்ட்மெண்ட் கொடுத்த விடை. அப்படியே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அப்படிப்பட்ட நிலை வராமல் பார்த்துக் கொள்ளப்படும்.

திரிபுரா மாநில அதிகாரிகள் வருகை

*** 566 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 நவம்பர் மாதம் திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் நமது மாநிலத்தில் நடைபெறும் பஞ்சாயத்து ஆட்சி முறையைக் கண்டறிய வந்தனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?